# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 5 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009*, பெப்புருவரி மாதம் *6* ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2009 ஆண்டின் 3 ஆம் இலக்க, ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*2009 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 5 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஒ. (கூட்.) 29/2007*

**ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

*முன்னுரை.*

*"ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் சங்கம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கம் ஒன்று அதன் உறுப்பினர்களால், சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டிருந்ததாலும் :*

*அத்துடன், சொல்லப்பட்ட சங்கம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அத்துடன் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்.*

***1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.*

***2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சங்கம் அல்லது ஆர். எஸ். பி. ஓ. ஏ." எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் சங்கம்" என்ற பெயர் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும்.*

அத்துடன், அது, அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம், அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) சிநேகபூர்வமாகவும், பரஸ்பர புரிந்துணர்வுடனும் வாழ்வதற்கான உயிரோட்டத்தை ஊக்குவித்தல் ;

(ஆ) உறுப்பினர்கள் ஒன்றுகூடுவதற்கான வாய்ப்பொன்றை ஏற்படுத்தல் ;

(இ) அதனது உறுப்பினர்கள், அவர்களின் குடும்பங்கள் அத்துடன் சங்கத்தின் உறுப்பினரல்லாதவராகவுள்ள ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் நலனோம்பு நடவடிக்கைகளை மேம்படுத்தல் ;

(ஈ) ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் சங்கத்தின் (ஆர். எஸ். பி. ஏ.) இன் மாதர் கிளையை ஒழுங்கமைப்பதில் உதவுவதற்கேதுவாக உறுப்பினர்களின் வாழ்க்கைத் துணைகளுக்கு உதவுதல் ;

(உ) அதனது உறுப்பினர்களுக்கும் ஏனைய ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இயலுமானபோது நிதி உதவியையும் ஏனைய உதவியையும் வழங்குதல் ;

(ஊ) சங்கத்தின் முக்கிய குறிக்கோள்களுக்கிணங்க நாட்டுக்கு ஏதேனும் சேவையை வழங்குதல் ;

(எ) உறுப்பினர்களுக்கு மருத்துவ உதவியாள் தேவையிலுள்ள போது அவர்களுக்கு உதவியளித்தலும் ஒத்தாசையளித்தலும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்ட ஏதேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுடன் அல்லது ஒழுங்கமைப்புகளுடன் ஒன்றிணைந்து செயற்படுதல் ; அத்துடன்

(ஐ) பொதுவாக மன்றத்தின் மேற்படி குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமானதுமான எவையேனும் விடயங் களையும் புரிதல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், 6 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்யப்பட்ட தலைவர், இரு உப தலைவர்கள், செயலாளர், உதவிச் செயலாளர்கள், பொருளாளர், உதவிப் பொருளாளர், ஐந்திற்குக் குறையாத செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் இறுதியாகக் கடமையாற்றிய இரு தலைவர்களையும் கொண்ட நிறைவேற்றுக்குழு ஒன்றினால் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கவும் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்த மன்றத்தின் பணிப்பாளர் சபையே கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர் சபையாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**5**. இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அமைய கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங் களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக் கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனை செய்வதற்கும், கொள்ளுவதற்கும், வாடகைக்கு எடுப்ப தற்கும், நிர்மாணிக்கவும் ; அத்துடன் வேறுவகையாகப் பெற்றுக் கொள்வதற்கும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகப் பணம் கடன் எடுப்பதற்கும், பெற்றுக் கொள்வதற்கும் ;

(இ) செலாவணிப் பத்திரங்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறேதேனும் கைமாற்றத்தகு ஆவணங்களைச் செய்வதற்கும், வரைவதற்கும், பொறுப் பேற்பதற்கும், கழிவு கொடுப்பதற்கும், வாங்கவும், விற்கவும் அத்துடன் விநியோகிக்கவும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத ஏதேனும் பணத்தை நிறைவேற்றுக்குழு பொருத்தமானதெனக் கருத்தும் ஏதேனும் முறையில் முதலீடு செய்வதற்கும் ;

(உ) எவரேனும் ஒரு ஆளுடன், ஏதேனும் கம்பெனியுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்கள் செய்து கொள்வதற்கும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு அவசியமாகக் கூடியவாறான அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல், வேலையிலீடுபடுத்தல், வேலை நீக்கஞ் செய்தல் அல்லது அவர்களது சேவையை முடிவுறுத்தல் அத்துடன் கூட்டுத்தாபனம் தீர்மானிக்கக்கூடியவாறான சம்பளங்களையும் படிகளையும் அத்துடன் பணிக்கொடைகளையும் அவர்களுக்கு வழங்குவதற்கும், அவர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கும் ;

(எ) உள்ளூர் அல்லது வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து அல்லது எவரேனும் ஆளிடமிருந்து உதவுதொகைகள், சேகரிப்புகள், அளிப்புக்கள், நன்கொடைகள் என்பவற்றை காசாகவோ அல்லது பொருளாகவோ பெறுவதற்கும், சேகரிப்பதற்கும் ;

(ஏ) வங்கிக் கணக்குகளைத் திறத்தலும், கொண்டு நடாத்துதலும், மூடுதலும், பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடன் எடுத்தலும், திரட்டுதலும் ; அத்துடன்

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது உகந்தனவான அத்தகைய எல்லாச் செயல்களையும் காரியங்க ளையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அல்லது எழுத்தினாலான வேறு ஏதேனும் சட்டத்துடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், அவர்களைச் சேர்த்தல், மீளப்பெறுதல், விலக்குதல் அல்லது அவர்கள் பதவி நீங்குதல் ;

(ஆ) நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், அதன் தத்துவங்கள், பணிகள், நிறைவேற்றுக்குழு உறுப்பினரின் பதவிக்காலம் என்பன ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்களின் தத்துவங்கள், நடத்தைகள், கடமைகள் மற்றும் பணிகள் அவர்களின் நியமனங்கள், பதவி விலகல் அல்லது பதவி வெற்றிடமாதல் மற்றும் பதவி நீக்கல் ;

(ஈ) நிறைவேற்றுக்குழுவினது கூட்டங்களைக் கூட்டுதலும் அவற்றை நடாத்துதலும், அவை தொடர்பான நடவடிக்கைமுறையும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும், நேரங்கள், இடங்கள், அறிவித்தல்கள் மற்றும் நிகழ்ச்சி நிரலும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் அதன் நிதிப் பாதுகாப்பு, அதன் கணக்குகளைப் பேணுதலும் கணக்காய்வு செய்தலும் ; அத்துடன்

(ஊ) பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதி எதுவும் அதே போன்ற கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதியொன்றைப் போன்று திருத்தப்படலாம், மாற்றப்பட லாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்துக்காகவும் கூட்டுத்தாபனத்தின் கணக்காலும் இறுதி விருப்பாவணக் கையளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், சந்தாப்பணம், உதவு தொகை அல்லது கட்டணங்கள் என்றவாறு கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் நிறைவேற்றுக்குழு தீர்மானிக்கக் கூடியவாறான ஓர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அரச வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தைப் புனரமைப்பதற்காகவும் சீர்திருத்துவதற்காகவும் அபிவிருத்தி செய்வதற்காகவும் பேணுவதற்காகவும் ஏதேனும் பெறுமானம், தேய்வு அல்லது ஒதுக்கு அல்லது கடனாழ் நிதியத்தைக் கூட்டுத்தாபனம் உருவாக்கலாம்.

(3) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் எல்லாச் செலவினங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் நிதி மற்றும் ஆதனம் எந்த வகையில் பெறப்பட்டாலும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கும், நிறைவேற்றுவதற்கும் மாத்திரமே பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், இலாபத்தின் பகுதியாகவோ, மிகையூதியம் என்ற வகையாகவோ அல்லது வேறு எவ்வகையாகவோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**8.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தை கையேற்கவும் வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலுடையதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க,

கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள முழுத் தத்துவத்துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக் கமையவும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**9**. (1) நிறைவேற்றுக் குழுவானது கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட மற்றும் செலவழிக்கப்பட்ட எல்லா பணங்கள் பற்றியும் முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் நிறைவேற்றுப் பேரவையால் நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த கணக்காய்வாளர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

இப்பிரிவில் தகமைபெற்ற கணக்காய்வாளர் என்பது,-

(i) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுவும் ஒன்று,

என்று பொருள்படும்.

*சங்கத்தினால் செலுத்தப்படவுள்ளனவும் சங்கத்திற்குச் செலுத்தப்படவுள்ளனவுமான கடன்கள்.*

**10**. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சங்கத்திற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப் படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று சங்கத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும், செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்கள், உதவு தொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் கலைக்கப்படுதல் அல்லது ஒடுக்கப் படுதலின் மீது எஞ்சியுள்ள ஆதனம்.*

**11**. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மீது அதன் எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்தபின்னர் ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது, ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும், அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களுக்கிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தலை அதன் விதிகளின் மூலம் தடைசெய்கின்றதுமான நிறுவனத்துக்கு அல்லது நிறுவனங்களுக்கு நிறைவேற்றுக் குழுவின் தற்றுணிபின்படி கொடுக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**12**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, தலைவர் செயலாளர் அல்லது நிறைவேற்றுக் குழுவினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஆளினதும் முன்னிலையிலன்றி அத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அப்படிக் கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**13**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்